நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்

**<u>சி.சி.எண். 142/2019</u>**

2021ம்ஆண்டு நவம்பர் திங்கள் 18ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | **: முனிசாமி** | **வயது** | **:** | **52** |
| **த/பெ.** | **: முருகன்** | **தொழில்** | **:** | **விவசாயம்** |
| **ஊர்** | **: படகுப்பம்** | **சமயம்** | **:** | |
| **வட்டம்** | **: வாணியம்பாடி** | **சாதி** | **:** | |
| **மாவட்டம்** | **: திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் படகுப்பம் கிராமத்தல் வசிக்கிறேன். விவசாயம் வேலை செய்கிறேன்.வழக்கின் எதிரிகளை தெரியும், அவர்கள் எனது பக்கத்து நிலத்துக்காரர்கள். (எதிரிகள் மனுவில் பேரில் ஆஜரில்லை). எங்களுக்கும் எதிரிகளுக்குமிடையே நிலம் சம்மந்தமான சிவில் பிரச்சனை இருந்து வருகிறது. எனது தம்பி மகேந்திரனின் நிலம் எதிரிகள் நிலத்திற்கு பக்கத்தில் உள்ளது. அதில் மூன்று அடி வழி பாத்தியம் எனது தம்பிக்கு உள்ளது. அந்த வழியாக எனது தம்பி பூ எடுத்துக்கொண்டு வாணியம்பாடி சென்றுவிட்டார்.மீண்டும் எனது தம்பி நிலத்திற்கு வந்து பார்த்த போது ரோஜாபூ முள்ளை வெட்டி அந்த வழியில் போட்டு வைத்திருந்தார்கள். இது சம்மந்தமாக எனது தம்பி எதிரிகளிடம் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டுள்ளார்.நான் அவ்வாறு தான் போடுவேன் உங்களுக்கு இதில் எந்த ஒரு பாத்தியமும் இல்லை என்று கூறியுள்ளார்கள்.கடந்த 04.07.2016ம்தேதி காலை அவ்வாறு நடந்துள்ளது. எனது தம்பி எனக்கு போன் செய்து நடந்த விபரங்களை கூறினார். நான் வெளியில் சென்றிருந்தேன். நான் வரும் வரை பிரச்சனை ஏதும் வேண்டாம் என்று கூறிவிட்டு அன்றைய தினம் மாலை 06.00 மணிக்கு நானும் எனது தம்பியும் நிலத்திற்கு வந்தோம். என்ன பிரச்சனை என்று வழக்கின் எதிரிகளிடம் நான் விசாரித்தேன்.அன்றைய தினம் காலையில் முள் வெட்டி போட்டது பற்றி அவர்களிடம் கேட்டேன்.அதற்கு அவர்கள் உங்களுக்கு இதில் வழி உரிமை இல்லை என கூறினார்கள்.பக்கத்தில் இடம் இருந்தால் எங்களுக்கு வழி விடுங்கள் என கூறினேன்.அப்போது ஏரிக்கரை ஓரம் எனது தம்பி நடந்து சென்றார். 1ம்எதிரி திருமால் எனது தம்பியின் கன்னத்தின் மீது கையால்

தாக்கினார். எனது தம்பி ஏரியில் விழுந்துவிட்டார்.எனது தம்பியை நான் தூக்க சென்ற போது, 2ம் எதிரி செந்தில் நிறைய தரக்குறைவான வார்த்தைகளால் திட்டி எனது இடது முட்டிக்கு கீழ் பின்பகுதியில் கத்தியால் வெட்டி விட்டார்.எனக்கு ரத்தம் வந்தது. மயங்கிவிட்டேன். ஆம்பூலன்ஸ் மூலம் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு முடியாது என்று கூறி அடுக்கம்பாறைஅரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.நான் அடுக்கம்பாறையில் சிகிச்சையிலிருந்த போது போலீசார் என்னை வந்து விசாரித்து எழுதிக்கொண்டார்கள். நான் நடந்த விபரங்களை கூறினேன்.நான் அதில் கையொப்பம் போட்டேன்.புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அ.சா.1 ன் சாட்சியம் நிறைவு செய்யப்படுகிறது.

நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்

**<u>சி.சி.எண். 142/2019</u>**

2021ம்ஆண்டு நவம்பர் திங்கள் 18ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.2வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | : **மகேந்திரன்** | **வயது** | : | **51** |
| **த/பெ.** | : **முருகன்** | **தொழில்** | : | **விவசாயம்** |
| **ஊர்** | : **படகுப்பம்** | **சமயம்** | : | |
| **வட்டம்** | : **வாணியம்பாடி** | **சாதி** | : | |
| **மாவட்டம்** | : **திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் படகுப்பம் கிராமத்தல் வசிக்கிறேன். விவசாயம் வேலை செய்கிறேன். அ.சா.1 எனது அண்ணன்.வழக்கின் எதிரிகளை தெரியும், அவர்கள் எனது பக்கத்து நிலத்துக்காரர்கள்.(எதிரிகள் மனுவில் பேரில் ஆஜரில்லை). எங்களுக்கும் எதிரிகளுக்குமிடையே நிலம் சம்மந்தமான வழி பிரச்சனை இருந்து வருகிறது.கடந்த 04.07.2016ம்தேதி காலை சுமார் 11.00 -12.00 மணிக்குள் என்னுடைய நிலத்திற்கு சென்றேன். எனக்கு பாத்தியப்பட்ட மூன்று அடி வழியில் 1 1/2 அடி தான் வழி விட்டு இருக்கிறார்கள். ரோஜா செடி முள்களை வெட்டி அருகில் இருந்த ஏரியில் போட்டுள்ளார்கள். வழியிலும் முட்கள் இருந்தது. அப்போது எனது இருச்சக்கர வாகனத்தில் அந்த முள் மாட்டிக்கொண்டு நான் ஏரிபள்ளத்தில் விழுந்துவிட்டேன்.நான் எனது வாகனத்தை நிறுத்திவிட்டு, நிலத்திலிருந்த எதிரிகளிடம் வந்து ரோஜா முட்கள் வெட்டி போட்டது சம்மந்தமாக கேட்டேன்.அதற்கு அவர்கள் உனக்கு இதில் வழி எங்கே இருக்கிறது உனது பத்திரத்தை வேண்டுமானாலும் கொண்டு வா என்று சொன்னார்கள். நான் இதுசம்மந்தமாக எனது அண்ணன் அ.சா.1க்கு போன் மூலம் தகவல் சொன்னேன்.அவர் வெளியில் சென்றிருந்தார். மாலை சுமார் 06.00 மணியளவில் அ.சா.1 எனது அண்ணன் வந்தார்.அவரிடம் நான் நடந்த விபரங்களை கூறினேன்.எனது அண்ணன் நிலத்தின் அருகே வந்தார். நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். இன்றைய தினம் அமாவாசையாக உள்ளது நாளை பேசிக்கொள்ளலாம் என்று என்னிடம் கூறினார். அப்போது எதிரிகள் மற்றும் பெருமாள், மல்லிகா ஆகியோர் நிலத்தில் இருந்தார்கள்.திருமால் தேவிடியா பையா உங்களுக்கு

என்டா வழி உங்கம்மாள என அசிங்கமாக பேசினார். என்னை 1ம் எதிரி கன்னத்தில் கையால் தாக்கினார். நான் அருகில் இருந்த ஏரியில் விழுந்துவிட்டேன். அ.சா.1 என் அண்ணன் என்னை தூக்க வந்தார். அப்போது 2ம் எதிரி கத்தியால் எனது அண்ணணின் கணுக்காலில் வெட்டி விட்டார். அதில் எனது அண்ணனின் கால் நரம்பு அடிப்பட்டு சதை தொங்கியது. எனது அண்ணனை தூக்கிக்கொண்டு நேராக காவல் நிலையம் சென்றேன். முதலில் மருத்துவமனைக்கு செல்லுங்கள் என கூறினார்கள். வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அதன் பிறகு அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்குஅனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அ.சா.2 ன் சாட்சியம் நிறைவு செய்யப்படுகிறது.